**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 12.06.2025**
**OS. No. 89/2019**
**வழக்கு சாட்சி PW.1–ரங்கநாதன் , த/பெ.தங்கவேல்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி மகாலிங்கத்தின் தந்தை சிங்காரம் எனது பெரியப்பா ஆவார். தாவா சொத்து ஆதியில் ராமகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராமகவுண்டர் அவர்களுக்கு பெருமாள் கவுண்டர், சிங்காரம் மற்றும் தங்கவேல் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்கண்ட தங்வேல் அவர்களுக்கு நானும், தங்கராஜ் என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தங்கராஜ் என்பவர் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தில் என் தந்தை தங்கவேல் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு தான் இந்த வழக்கு என்றால் சரிதான். என் தந்தை தங்கவேல் தற்போதும் உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். நானும், என் தம்பி தங்கராஜ் மற்றும் என் தந்தை தங்கவேல் ஆகியோர்கள் எழுத்துபூர்வமாக பாகபிரிவினை ஏதேனும் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் இல்லை, வாய்மொழியாக ஏற்படுத்திக்கொண்டோம். வாய்மொழியாக எந்த வருடத்தில் பிரித்துக்கொண்டோம் என்று எங்கள் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ச.எண்.2007/2E ஆனது என் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது, அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். ச.எண்.16/1B என்பது எங்களுடைய சொத்து அல்ல என்றால் சரிதான். ச.எண்.16/1B என்பது பிரதிவாதிகளின் சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 02.07.2025 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.